**முசிறி அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: முனைவர்.து.கணேசன், எம்.காம்.,எம்.பி.ஏ.,எம்.பில்.,பி.எச்டி.,**

திருவள்ளுவராண்டு – 2055, ஸ்ரீ குரோதி ஆவனி -14.
ந.க.எண்:547/ஆ/2023, நாள்: 30.08.2024

**பொருள்:** கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி - அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, முசிறி – கருணை அடிப்படையில் பணி நியமனம் - **திருமதி.ப.சரிகா, இளநிலை உதவியாளர்** என்பாருக்கு – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1) சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குர் அவர்களின் செயல் முறை ஆணைகள் ப.மு.எண்:18920/பி2/2022, நாள்:13.07.2023.
2) இவ்வலுவலக முதல்வரின் செயல்முறைகள் ந.க.எண்:547/ஆ/2023, நாள்: 27.07.2023.
3) அரசாணை நிலை எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(ஞ1) துறை, நாள்:08.03.2023.
4) சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:1058/பி1/2023, நாள்:06.12.2023 உடன் இணைத்து பெறப்பட்ட அரசு கடித எண்.1535/ஜி2/2023-1 நாள்:30.10.2023.

***************

**ஆணை:**

பார்வை(1)ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, திருச்சி-23, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)யில் வேதியியல் துறை இணைப்பேராசிரியராக பணிபுரிந்து வந்த (லேட்).திரு.வீ.பழனிவேல் என்பார் பணிக்காலத்தில் இயற்கை எய்தியதால், அன்னாரின் (வாரிசுதாரர்) மகள் திருமதி.ப.சரிகா என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. பார்வை(2)ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக 27.07.2023 முற்பகல் இக்கல்லூரில் பணியில் சேர்ந்தார்.

பார்வை(3)ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நியமன அதிகாரியே பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என பார்வை(4)ல் காணும் சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், **இளநிலை உதவியாளர் திருமதி.ப.சரிகா** என்பார் பணியில் சேர்ந்து ஓராண்டு காலம் நிறைவுபெற்றமையால், அன்னார் பணியில் சேர்ந்த நாளான **27.07.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து** ஆணை வழங்கப்படுகிறது.

(த.பா.ப)

மேற்காணும் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் என்றும், இக்காலக்கட்டத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

முதல்வர்
Principal,
Arignar Anna Govt. Arts College,
Musiri - 621 201.
D. O Code - SB 5 F 3

30/8/24

பெறுநர்: சார்ந்த பணியாளர்

நகல்

1. கல்லூரிக் கல்வி இயக்குநர்,
   கல்லூரிக் கல்வி இயக்ககம்,
   சென்னை – 15.(தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
2. பணிப்பதிவேடு
3. உபரி – 1.